★★
Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

ஒளி 7 EELA NADU இதழ் 149

National Tamil Daily தேசிய தினசரி

(10-7-65)

விசுவாவசு ஆனி 26 சபி அல்பிறை 10 சனிக்கிழமை

தரத்திலும்
மணத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே
தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத்தெரு,
கொழும்பு - 12 போன்: 5830

## 720 பேர் செல்லும் விமானம்

720 பேர் பிரயாணஞ்செய்யும் விமானம் ஒன்றை ரஷ்யா தயாரித்துவருகிறது. இந்த விமானத்தில் சிற்றுண்டிச்சாலை, மதுபானச்சாலை, தொலைக்காட்சி, சினிமா ஆகியவை இடம்பெறும்.

●

மோட்டார் பந்தயத்தில் உலக சாம்பியனான பிரிட்டனைச் சேர்ந்த டொனல்ட் காம்பெல், மணிக்கு 840 மைல் செல்லக்கூடிய மோட்டார் ஒன்றைத் தயாரிக்கக் கட்டளையிட்டிருப்பதாய் அறி... ர்

### அரசாங்கத்தை

# வீழ்த்த சதிவேலைகள் நடைபெறுகிறதாம்

## பார்லிமெண்டில் ஜே. ஆர். தகவல்

கொழும்பு, வெள்ளி

"சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவது எங்கள் நோக்கமல்ல. பத்து வருடங்களாக எதிர்க்கட்சியில் இருந்த எமக்கு சகல அனுபவங்களும் உண்டு. ஜனநாயகத்தை பாதுகாப்பதே தேசிய அரசாங்கத்தின் முக்கிய நோக்கமும் இலட்சியமுமாகும். எந்த விதத்திலும் இந்த நாட்டின் அரசியல் சட்டத்துக்கு விரோதமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட மாட்டாது. இலங்கையில் ஜனநாயகம் அழிந்துவிடுமோ என்று எவரும் பயப்படத்தேவையில்லை";

இவ்வாறு பார்லிமெண்டில் திரு. பீட்டர் கெனமனும், டாக்டர் என். எம். பெரேராவும் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா பதிலளித்தார்.

திரு. ஸ்டான்லி ஜெயவீராவின் வீட்டை சோதனையிட்டு அவரை பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கும் படி நான் உத்தரவிடவில்லை எனவும் அரசாங்க ஊழியர் நிர்வாக கோட்பாடுகளுக்கிணங்கவே பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி உத்தரவிட்டிருந்தார் எனவும் திரு. ஜெயவர்த்தனா திருவாளர்கள் பீட்டர் கெனமன், என். எம். பெரேரா ஆகியோர் ஸ்டான்லி ஜெயவீரா விஷயமாக கேட்டபோது பதிலளித்தார்.

திரு. ஜெயவர்த்தனா பார்லிமெண்டில் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசாங்கத்தை வீழ்த்த பல முயற்சிகள் நடைபெற்று வருவதாக தகவல் கிடைத்து வருகிறது. பொலிஸ் இலாகாவுக்கு இவை முதலில் கிடைத்து வருவதால் அதற்கு பொறுப்பான பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு மேலதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளது. புகைபிரதம் ஒன்றை தடம்புரளச் செய்வதற்கு செய்யப்பட்ட சதி கண்டுபிடிக்கப்பட்டதால் உயிர், பொருள் சேதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளது. இது போன்று பல சதி வேலைகள் நடைபெறுவது பற்றி தகவல் கிடைத்துள்ளன".

அரசாங்கம் எடுக்கும் சகல நடவடிக்கைகளும், பிரதம மந்திரியினதும், மந்திரி சபையினதும், அரசாங்க பார்லிமெண்டரி குழுவினதும் ஒத்துழைப்புடனேயே செயல்படுத்தப்படுகிறது.

பார்லிமெண்ட் இம்மாதம் 27-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

## மின்சார விபத்து விவகாரம் மாநகரசபையில் விவாதம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று மேயர் திரு எஸ். வி. மகாதேவா தலைமையில் கூடிய போது, யாழ்ப்பாண நகரின் மின்சார நிலையத்தின் மோசமான நிர்வாகம் பற்றியும் அதன் விளைவால் சமீபத்தில் ஏற்பட்ட ஓர் மரணம் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

முதலாம் வட்டார அங்கத்தவர் திரு ஏ. ஜி. இராஜசூரியரால் கொண்டுவரப்பட்ட இப்பிரேரணைமீது மிகசுவாரஸ்யமாக ஆரம்பிக்கப்பட்ட விவாதம் பின்னர் பல சச்சரவுகளால் குழப்பமடைந்த துவங்கியது. பகிரங்க வீதிகளில் பழுதுற்ற மின்சாரக் கம்பிகளை திருத்தப்படாததால் அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டதாகவும் இது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கவலையீனத்தினால் தான் ஏற்பட்டதெனவும் அவர் எடுத்துக்கூறினார். அதனால் இப்பகுதி நிர்வாகத்தை மீண்டும் ஓர் மின்சார என்ஜினியரின் கீழ் சீர்திருத்தியமைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

நல்லூர் வட்டார அங்கத்தவர் திரு ஆ. துரைசிங்கம் பேசுகையில் பல ஆண்டுகளாக கவனிக்கப்படாத சீர்கேடுகளினால் தான் இவ்வித அசம்பாவித விபத்துக்கள் ஏற்படக் காரணமாக இருக்கிறதென்றும் தற்போதைய நிர்வாகத்தில் பிழை சொல்வதற்கு இடமில்லையெனவும் குறிப்பிட்டார். அடுத்த வரவுசெலவுத் திட்டத்தில் மாநகரசபை இதற்கான நிதியை ஒதுக்கவேண்

(6-ம் பக்கம் பார்க்க)

## காகித உற்பத்திக் குறியளவு இந்த வருடம் நிறைவேறும்
### வாழைச்சேனை தொழிற்சாலை பற்றி கைத்தொழில் மந்திரி விளக்கம்

கொழும்பு, வெள்ளி

வாழைச்சேனை காகித உற்பத்திச் சாலைக்குத் தேவையான தண்ணீர் விநியோகத் திட்டம் பூர்த்தியாக்கப்பட்டு மற்றுமொரு இயந்திரசாதனம் பொருத்தப்பட்டதும் திட்டமிட்டபடி மூன்றாவது கட்டத்தை அடையக்கூடியதாக இருக்குமென்றும், இது இவ்வருடத்தில் நிறைவுபெறுமென்றும் கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் தெரிவித்தார்.

நியமன அங்கத்தவர் டாக்டர் ஏ. ரத்னபாலா வாழைச்சேனை காகித உற்பத்தித் தொழிற்சாலை பற்றிக் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே மந்திரி மேற்கண்டவாறு கூறினார்.

வாழைச்சேனை காகித உற்பத்தித் தொழிற்சாலையின் உற்பத்திக் குறியளவு என்னவெனவும், என்ன அடிப்படையில் இது மதிப்பிடப்பட்டுள்ளதெனவும், குறியளவு அடைந்துவிட்டதா எனவும் டாக்டர் ரத்னபாலா கேட்டபோது கைத்தொழில் மந்திரி தெரிவித்ததாவது:

காகிதத் தொழிற்சாலை நாளொன்றுக்கு 12.5 டன்னும், வருடமொன்றுக்கு 3750 டன் காகிதமும் உற்பத்தி செய்வதற்கு முதலில் திட்டமிடப்பட்டது. 1960ம் வருடத்துச் சீர்திருத்த விஸ்தரிப்புத் திட்டத்தின்படி முதல்கட்டத்தில் உற்பத்தி நாளொன்றுக்கு 15 டன். வருடமொன்றுக்கு 4,500 டன். இரண்டாவது கட்டத்தில் நாளொன்றுக்கு உற்பத்தி 18 டன். வருடமொன்றுக்கு 5,500 டன்.

வருடத்தில் 300 வேலைநாட்களில் நாளொன்றுக்கு 8 மணிநேர வேலை மூன்று தவணைகளில் செய்வதைக்கொண்டே இந்த மதிப்பீடுசெய்யப்பட்டது. 1962ம், 64ம் வருடத்திலும் முதல்கட்டக் குறியளவும் இரண்டாம்கட்டக் குறியளவும்

(6-ம் பக்கம் பார்க்க)

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518 தந்தி: "யப்பான்"

### லஞ்ச ஊழல் மசோதா வாக்கெடுப்பின்றி நிறைவேறியது

கொழும்பு, வெள்ளி

லஞ்சம் வாங்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களை தண்டிக்க வகைசெய்யும் மசோதா பார்லிமெண்டில் வாக்கெடுப்பின்றியே நிறைவேற்றப்பட்டது. லஞ்சம் பெறும் அரசாங்க ஊழியர் பற்றி பொதுமக்கள் தகவல் கொடுக்கவும், விசாரணை மூலம் உத்தியோகஸ்தர்களுக்கு தண்டனை, அபராதம் விதிக்கவும் இந்தமசோதா வகைசெய்கிறது.

### தேசிய சுவீப் முடிவுகள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
08 M 0297 ரூபா 80,280

இரண்டாவது பரிசு
07 R 0007 ரூபா 12,092

மூன்றாவது பரிசு
08 D 0426 ரூபா 3,028

(6-ம் பக்கம் பார்க்க)

### இராணுவத்தின்
## சட்டவிரோத பிரதம பிரிவு பலாலிக்கு மாற்றப்படும்

கொழும்பு, வெள்ளி

கள்ளக் கடத்தலைக் கண்காணிப்பதற்கும், சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதற்குமாக இருக்கும் இராணுவப்படையின் பிரதமபிரிவை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மாற்றுவதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் கள்ளக் கடத்தலைக் கண்காணிப்பதிலும், சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பதிலும் தீவிரமாக ஈடுபடுவர், பலாலியில் இராணுவப் பிரிவினரின் தலைமை அலுவலகம் அமைக்கப்படும்.

மன்னாரிலும் இதேவிதமாக கள்ளக்கடத்தல் கண்காணிப்பும், சட்டவிரோதக் குடியேற்றத்தடுப்பும் தீவிரமாகச்செயல்படுத்தப்படும்.

இரண்டு வாரத்துக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின்

(6ம் பக்கம் பார்க்க)

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

## மணிவாக்கு

பிரார்த்தனைசெய்யாமல் நான் எந்தக் காரியமும் செய்வதில்லை. மனிதர் தவறுசெய்யக்கூடியவர்கள். அதிக தவறுசெய்யாமல் நமக்கு இறைவன் வழிகாட்ட, கள்ளங்கபடமற்ற மனத்துடன் நமக்கு பிரார்த்தனை அவசியமாகின்றது

—மகாத்மா காந்தி

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஆனி ௴ 26 உ (10-7-65)

## தமிழருக்குப் புதிய தடை

இலங்கையரல்லாதார் வீடு அல்லது காணி வாங்குவதை தடை செய்யக்கூடியதாகச் சட்டம் இயற்றவேண்டும் என்று கோரி எதிர்க்கட்சித் தலைவர் கொண்டுவந்த பிரேரணையை ஜனப்பிரதிநிதிகள்சபை ஏற்றுக்கொண்டுள்ளது. சட்டம் கொண்டுவருவதாக அரசாங்கமும் சம்மதித்துள்ளது. கொள்கையளவில் இது சரியே. ஆனால் எப்படியான சட்டம் வரப்போகிறது? இலங்கையரையும் இது பாதிக்குமா? என்பதுதான் கவலை அளிப்பதாகும்.

இலங்கையர் யார்? இலங்கையரல்லாதவர் யார்? இதற்கு முதலில் முடிவு காணப்படவேண்டும். இலங்கையர், இலங்கையரல்லாதார் யார் என்பதைத் தீர்மானிப்பது யார்? என்பதற்கும் ஒரு வழி காணப்படவேண்டும். இப்பிரேரணைமீது பார்லிமென்டில் நடைபெற்ற விவாதத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு சிவசிதம்பரம் சுட்டிக்காட்டியதுபோல இலங்கையர், இலங்கையரல்லாதார் யார் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் அரசாங்க இலாகாத் தலைவர்களான உத்தியோகத்தர்களிடம் விடப்படக்கூடாது. அரசாங்க இலாகாத் தலைவர்களுக்கும் இதர அரசாங்க ஊழியர்களுக்கும் இந்த அதிகாரம் இப்பொழுது வழங்கப்பட்டிருக்கிறது. இதன் பயனாக தமிழ்பேசும் சமுதாயத்தினர் அனுபவித்து வரும் கஷ்ட, கஷ்டங்கள் கொஞ்சமல்ல, பங்கீட்டரிசிட புத்தகங்கள் பெறுவது முதல் 'பாஸ்போர்ட்' எடுப்பதுவரை சில்லறை அலுவல்களுக்குப் "இலங்கையர்" என்பதை நிரூபிக்கும்படி அரசாங்க அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் கேட்கும் கேள்விகளும், குறுக்குக்கேள்விகளும் மிக மிக அதிகம், 'அப்புகாமி' என்றால் அவர் இலங்கையர்தானென்பதும் 'அப்துல்காதர்', அல்லது 'ஆறுமுகம்' என்றால் அவர் 'சந்தேகப் பிரஜை' என்பதும் அரசாங்க அதிகாரிகளின் முடிவு. இந்நிலையில் "இலங்கையரல்லாதார்" காணி வாங்குவதையோ வேறு அசையாத ஆதனங்களை வாங்குவதையோ தடைசெய்யக்கூடிய சட்டம் கொண்டுவரப்பட்டால் இங்குள்ள தமிழ்பேசும் மக்கள் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே வசிப்பவர்கள் அசையாத ஆதனங்கள் எதையும் வாங்கமுடியாத நிலை ஏற்படும்.

எனவே உடுப்பிட்டிப் பிரதிநிதி பார்லிமென்டில் சுட்டிக்காட்டியதுபோல் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரின் பிரச்னைக்குத் தீர்வுகாண இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை அமுல்நடத்தி அப்பிரச்னைக்கு ஒரு திட்டமான முடிவு கண்ட பின்னர் இலங்கையரல்லாதார் அசையா ஆதனங்களை வாங்குவதற்குத் தடைசெய்யும் சட்டம் கொண்டுவரப்படலாம். இலங்கையர், இலங்கையரல்லாதார் யார் என்பது திட்டமாகத் தெரியும்வரை இச்சட்டத்தை அரசாங்கம் அவசரப்பட்டு கொண்டுவரக்கூடாது.

# சைவமும் தமிழும் வளர்க்கும் குரும்பசிட்டி சன்மார்க்கசபை

— இ. நாகராஜன் —

கடந்த 30 ஆண்டுகளாகக் குரும்பசிட்டி என்னும் கிராமத்தில் சிறப்புற சமூகப் பணியாற்றும் சன்மார்க்கசபை யாழ் தமிழ்பேசும் மக்கள் வாழும் பகுதியிலெல்லாம் பரந்துள்ளது. 1958ம் ஆண்டுவரை ஈழத்தின் தேசிய கலாசார, இலக்கிய தூதனாக பணிபுரிந்து வந்த 'ஈழகேசரி' பத்திரிகையின் ஸ்தாபகரான ஈழகேசரி பொன்னையா அவர்களும் குரும்பசிட்டியின் மண்ணில் பிறந்து நாட்டுப் பற்றோடு உழைக்கும் பெருமக்களும் கட்டிவளர்த்த பெருமைக்குரியதாக எழிலுடன் இச்சபை திகழ்கிறது.

### மணிமண்டபம்

சைவத்தின் சாத்வீக அமைதிச் சூழ்நிலையில் கலைமகளின் படிவம் நடுநாயகியாய்க் கலை மணம் பரப்ப, தேசியச் செல்வர்களும், உள்ளூர்த்தொண்டர்களும் அழகுறு சித்திரங்களில் மிளிர்ந்துகொண்டிருப்பர். பல நூற்றுக்கணக்கான நூல்கள் இச்சபையின் மணிமண்டபத்தே கலையம்சத்துடன் பேணிக் காப்பாற்றப்பட்டுவருகின்றன. சபைக்கெனத் தனிப்பட பல்லாயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு தமிழர் கலாசாரத்தின் பிரதிபலிப்பாக மணிமண்டபம் ஒன்றை நிர்மாணித்துள்ளனர் சபையினர்.

### கிளை ஸ்தாபனங்கள்

மணிவாசக நூல்நிலையம் (வாசிகசாலை), சன்மார்க்க ஐக்கிய நாணய சங்கம், சன்மார்க்க கைப்பந்தாட்டக் கழகம், சன்மார்க்க சனசமூகநிலையம், சன்மார்க்க கிராமமுன்னேற்றச் சங்கம், சன்மார்க்க இளைஞர்சங்கம் (விளையாட்டுக் கழகம்), சன்மார்க்க மாதர் சபை, சன்மார்க்க மாதர் ஐக்கிய சங்கம், சன்மார்க்க நாடகமன்றம், இந்துசமய விருத்திச் சங்கம் ஆகிய உட்பிரிவுகளைக் கொண்டியங்குவது சன்மார்க்கசபை. சமூகம், சமயம், உடல் ஆரோக்கியம், சேமிப்பு கலை கலாசாரம், அறிவு ஆகிய பல்துறைகளும் இதனால் கிராமத்தில் விருத்தியடைந்துள்ளன. அவ்வப்போது (கடந்த 30 வருடகாலத்தில்) இங்கு வருகை தந்த பிரமுகர்களின் வாய்மொழிகளே இச்சபையின் சேவையை நயம்பட உரைக்கின்றன.

### சபையின் நிலைக்களன்

குரும்பசிட்டி கிராமம் மயிலிட்டி கிராமசபையின் பரிபாலனத்துக்குட்பட்ட பகுதியாகும். தொன்றுதொட்டு சைவ சமயத்தைக் கண்ணேபோல் போற்றிப் புரிந்துவரும் பெருமக்களைத் தவிர பிற மதத்தவரை இப்பகுதியில் காண இயலாது. சைவமும் தமிழும் கூடிக் குலவிய சிறந்த பண்பாட்டின் வளர்ச்சிக்குச் சன்மார்க்கசபையின் சேவையே உரமிட்டுவருகின்றது. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அதாவது 19ம் நூற்றாண்டின் மத்தியகாலப் பகுதியில் ஆங்கிலக் கல்வி பெற்று அக்கால ஆட்சிமன்றங்களில் சேவையாற்றிய கல்விமான்கள் சிலர் இப்பகுதியில் தோன்றினர். அவர்களது உளத்தில் உருவாகிய கலாசாரப் பற்றே இக்கிராமத்தின் சிறப்புக்கு ஆணிவேராக அமைந்தது.

### சபையின் ஆரம்பமும் கிராமப்பணியும்

ஸ்ரீமத் விவேகானந்த சுவாமிகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்ததன் பேறாக குரும்பசிட்டியில் "மயிலிட்டி தெற்கு இந்துவாலிபர் சங்கம்" ஒன்று உருவாகி 920-ம் ஆண்டுவரை சமயப்பணி புரிந்துவந்தது. இந்த ஆர்வம் பிஞ்சில் கருகிவிடாது தொடர்ந்து சைவ வாலிபர் சங்கம், சனோபகார சங்கம் என்பன தோன்ற வழியமைத்தது. சனோபகார சபையே பவ ஆண்டு ஐப்பசித் திங்கள் விஜயதசமித் தினத்தன்று (17-10-34) மணிவாசக நிலைய மண்டபத்தில் ஈழகேசரி பொன்னையா ஜே. பி அவர்கள் தலைமையில் "சன்மார்க்க சபை" எனும் புதுப்பெயர் இடப்பட்டது.

ஒருகிராமத்தின்வளர்ச்சியை உயர்ச்செயவதற்குரிய முக்கிய சாதனங்கள் எவை? அவற்றை எவ்வகையில் பெற்றுக்கொள்ளலாம்? என்பனவற்றை இச்சபையினர் தீர்மானித்து அதற்கான முயற்சியில் விடாது ஈடுபட்டுழைப்பர், அரசியலாளரை சமூகவிற்பன்னரை, அவ்வத் துறைகளுக்குரிய பொறுப்பாளரையெல்லாம் எழுத்துமூலமும். நேரடிப்பேச்சின் மூலமும் சம்மதிக்கச்செய்து பல ஆக்கமான காரியங்களை மேற்கொண்டனர். அவற்றின் சின்னங்களாக குரும்பசிட்டி தபாற்கந்தோர், அரசாங்க வைத்தியசாலை, ஈழகேசரி பொன்னையா பகிரங்கவீதி, வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் என்பன மிளிர்கின்றன. பிறர்க்குச் சேவைசெய்வதே பிறவியின் பயன் என்று கருதுகின்ற இதயங்கொண்டவர்கள் அன்று தொட்டு இன்றுவரை இச்சங்கத்தில் சேவை புரிகிலுள்ளார்கள், இடைக்காலத்தே சேவையாற்றி மறைந்த பெரியார்களைப் போற்றி எதிர்வரும் சந்ததியினரை ஊக்கப்படுத்தும் இச்சபை தோன்றுதொட்டு இன்றுவரை தொடர்பாக நிலைத்து இயங்குதல் வேண்டுமென்பதற்கு ஆழமான சேவை உரம் இடுகிறார்கள். முன்னோர்கள் மதிக்கப்பட்டால் தான் பின்வரும் இளைஞர்களுக்கு உற்சாகம் உண்டாகும். சபை மண்டபத்தில் விளங்குகின்ற பிரதிமைகள் பல இச்சங்கத்தின் ஆக்கப்பணியில் உழைத்தவர்களுக்குரியனவாகும்.

### சபையின் சமயப்பணி

சைவமும் தமிழுமே எம் ஆத்ம ஈடேற்றத்துக்குறுதுணையானவை என்பதை இச்சபை எக்கணமும் மறப்பதில்லை. உள்ளூரில் இலங்கும் அம்பாள் கோவில் விழாக்களின்போது சிவபுராணம் அச்சோப்பதிகம், கோளறு பதிகம்ஆகியவற்றை ஓதுவித்து மக்கள் மனதில் அருளுணர்க்கம் அடைய வழி வகுத்துள்ளது. சபையின் மிக முக்கியமானவர்களாகச் செயலாற்றிய பெரியார்களின் ஞாபகார்த்தமாக இறைவன் நாமத்தை இலங்கவைக்கும் தேவாரத் திரட்டு, பாராயணத்திரட்டுக்களை பேசிறுசிறு நூல்களாக அச்சிட்டு இலவசமாக வழங்கியுள்ளது மாணவர்கள் சமயத்தில் ஞானமுள்ளவர்களாக மிளிரவேண்டுமென்ற கருத்தினால் விவேகானந்த சபையினர் நடத்தி வந்த சமயபாடசோதனைகளில் உள்ளூர் மாணவர்கள் அக்கறையோடு பங்குபற்றி தேர்ச்சி பெறுமுட்படுகளிலை மேற்கொண்டிருக்கிறது.

சைவப் பெரியார் ஏழாலை திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்களை ஆசிரியராகக்கொண்ட சைவ சித்தாந்தவகுப்பை நடத்தியது. இக்காலத்தில் அரசினர் பாடசாலைகளில் சமய பாடத்தைக் கட்டாயபாடமாகக் கற்பிக்க வேண்டுமெனப் பணித்தனர். இச்சபையினர் பள்ளிக்கூடங்களுக்குப் பயன்பெறத்தக்க சைவசமயபோதினி என்னும் பாடநூலை (3-ம் வகுப்புத் தொடக்கி 6-ம் வகுப்பு வரை) வகுப்புகளுக்கு வேறுவேறு தனித்தனியாக வெளியிட்டனர். இச்சபையினர் சமயத்துக்குச் செய்த சேவையின் எடைக்கல்லாக மிளிர்வது சைவநற்சிந்தனைகள் என்னும் நூலாகும், பண்டிதமணி கணபதிப்பிள்ளையவர்களைக் கொண்டு இந்நூலை எழுதி வெளியிட்டனர்.

சமயப்பெரியார்கள், நாயன்மார்கள் ஆகியவர்களின் குருபூசைகளைத் தொடர்பாக இச்சபையினர் நடாத்தி மக்கள் மனதில் சமயக் கருத்தைப் புகுத்திவருகின்றனர்.

### நூல் வெளியீடல்

இறவாத பெருநூல்களே தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு உறுதுணையப்பன. இதை அடிப்படையாகக் கொண்டு நல்ல நூல்களை வெளியிடுவதன் மூலம் நாட்டில் இலக்கியச் சேவையையும் இச்சபை செய்து வருகின்றது. இச்சபையின் தலைவராக விளங்கிய ஈழகேசரி பொன்னையா அவர்கள் மாணவர் இதயங்களில் இலக்கிய உணர்ச்சியைத் தூண்டக்கூடிய புஸ்தகங்களை எழுதும்படி சபையைக் கேட்டுக்கொண்டார் இவ்வேண்டுகோளுக்கமைய அக்காலத்தில் செயலாளர்களாக விளங்கிய பண்டிதர் வ. நடராஜன். கனக செந்திநாதன் என்போர் இலக்கிய மஞ்சரித் தொடரை நான்காம் ஐந்தாம் வகுப்புகளுக்குத் தனித்தனியே எழுதினர். இவற்றை வட இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம் வெளியிட்டது. அன்மையில் இலங்கையில் இலக்கிய விழிப்புணர்ச்சியினால் உந்தப்பட்டவர்கள் அவ்வப்போது தமது ஆக்கங்களைத் தனிப்பட்ட ரீதியில் நூல்களாக்கிவருகின்றனர். இலங்கையில் புதுமையாக ஈழத்து எழுத்தாளர்கள் ஐவர் (இ. நாகராஜன், கனக. செந்திநாதன், சு. வே. குறமகள், எஸ். பொன்னுத்துரை) படைத்த "மத்தாப்பு" என்னும் குறுநாவலை இச்சபை வெளியிட்டது. திருநெல்வேலி சிற்பாசாரியார் ஆறுமுகம் அவர்களின் மைந்தனும் மகாஜனக் கல்லூரி ஆசிரியருமான திரு. ஆ. தம்பித்துரை அவர்கள் எழுதிய 'ஓவியக்கலை' 'சிறுவர் சித்திரம்' ஆகிய நூல்களும் இச்சபையினரால் வெளியிடப்பட்டன. இவைதவிர "ஈழகேசரி" பொன்னையா அவர்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம், காலஞ்சென்ற திருநெல்வேலி சிற்பாசாரியார் திரு ஆறுமுகம் அவர்கள் பற்றி இரசிகமணி கனக செந்திநாதன் எழுதிய "கலைமகளின் தவப் புதல்வன்" என்னும் புத்தகங்களும் இச்சபையின் வெளியீடுகளே.

நாட்டில் இலக்கிய உணர்ச்சியை ஊட்டுவதற்கு நூல்களை வெளியிட்டது மாத்திரமன்றி இலக்கிய விழாக்களையும் இச்சபை நடாத்தியுள்ளது. ஏனைய பதிப்பகங்கள் மன்றங்கள்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

ஒரு கூட்டம், சரியாக இரவு 7 மணிக்கு ஆரம்பமாகிவிடுமென்றும், எல்லோரும் சமூகமளிக்கவேண்டுமென்றும் துண்டுப் பிரசுரத்திலேயே அச்சிட்டிருந்தனர், ஆனால் அந்தக் கூட்டம் எத்தனை மணிக்கு ஆரம்பமானது தெரியுமா? 9-30க்குத்தான்!

யாழ்ப்பாணத்திலே எந்தக் கூட்டமும் குறித்த நேரத்தில் ஆரம்பமாகாதென்றும், இரண்டொரு மணி நேரம் தாமதமாகத்தான் கூடுமென்றும் பொதுவாக ஒரு கருத்து நிலவுகின்றது. இந்த 'அவப்பெயரை' மாற்றத்தான்வேண்டும்.

குறித்தபடி 7 மணிக்குச் சிலர் கூட்டத்துக்கு வந்திருந்தனர். இரண்டொருவர் வந்திருந்தாலும் குறித்த நேரத்துக்குக் கூட்டத்தை ஆரம்பித்துவிடுவதாயின், சிறுகச்சிறுக இந்தப் பழக்கம் மறையும். மக்களும், தாமதமாகத்தான் எல்லாம் நடைபெறுமென்று எண்ணாமல் சரியான நேரத்துக்கு வந்துவிடுவார்கள்,

சில இடங்களிலே கிராமத்து மக்கள் வேலைமுடிந்து சாப்பிட்டுவிட்டு வர இரவு 8 மணியாகக்கூடும். அப்படியாயின் கூட்டம் 8 மணிக்கு ஆரம்பமாகுமென்று அறிவிக்கலாம். மக்களின் வசதியை முக்கியமாகக் கவனிக்கத்தான் வேண்டும், ஆனால் 7 மணிக்குக் கூட்டமென்று அறிவித்துவிட்டு 9 மணிக்குப் பிந்தி ஆரம்பிக்கும் பழக்கத்தை எவ்வளவு சீக்கிரத்தில் விடுகின்றோமோ அவ்வளவும் நல்லதாகும்,

அதுவும் கோயில் முதலிய தெய்வீக சம்பந்தமான விஷயங்களில் ஒரு நிமிஷமும் பிசகக்கூடாது. தெய்வீக ஆட்சியிலே சூரிய, சந்திர, நட்சத்திரங்களும், கிரகணம் முதலியவைகளும் ஒரு விநாடியும் தவறுகின்றனவா?

* * *

இன்று நடைபெறும் அரசாங்க லிகிதர் வேலைக்கான பரீட்சையில் முதன்முதலாக 24 ஆயிரத்து 187 பெண்கள் எழுதுகிறார்களாம். இதுவரை இப்பரீட்சைக்குப் பெண்கள் அனுமதிக்கப்படவில்லை, பெண்களுக்கு இருந்த இத்தடை நீக்கப்பட்டுவிட்டது மிகவும் சரி.

மொத்தம் சுமார் 54 ஆயிரம் பேர் பரீட்சை எழுதுகிறார்களாம், இவர்களில் எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்குமோ தெரியவில்லை. பரீட்சையில் தேறினாலும், காலி இடங்கள் எவ்வளவு இருக்கின்றனவோ அவ்வளவு பேருக்குத்தான் வேலை கிடைக்கும்.

ஏற்கெனவே வேலையில்லாக் கஷ்டம் அதிகரித்துவருகையில் லிகிதர் வேலைக்கும் பெண்கள் போட்டிபோடுவதனால், தங்களுக்கு வேலை கிடைப்பது இனி வரவரக் குதிரைக்கொம்பாகிவிடுமென்று அஞ்சுகிறார்கள் படித்த இளைஞர்கள், எந்தத் துறையிலும் அதிலும் படிப்பிலே பெண்களுக்குச் சம சந்தர்ப்பம் அளிப்பதாயின் அவர்களே பெரிதும் வெல்லுவர். என்பதில் ஐயமில்லை, பாவம் ஆண்கள்!

* * *

வேம்படி பெண்கள்கல்லூரியை சேர்ந்த ஒரு மாணவி 16 வயதிலேயே எச். எஸ். ஸி பரீட்சையில் 4 பாடங்களிலும் விசேஷ சித்தி பெற்றிருக்கிறாராம். இருமுறை 'டபிள் புரமோஷன்' பெற்றுள்ளதாயும், பரதநாட்டியம், தையல் முதலிய கலைகளில் தேர்ச்சிபெற்றுள்ளதாயும் கேள்விப்பட்டேன், சர்வகலாசாலையில் மெடிகலில் சேரவயது காணாதென்று இருவருடங்களுக்கு முன் தடுத்துவிட்டதாயும் வகுப்பிலே முதன்மையாக இருப்பதால் விதிவிலக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

தென் வியட்னும்

# ஜெனரல் டெய்லர் ராஜினமா; கெபொட்லாட்ஜ்

## மீண்டும் அமெரிக்க ஸ்தானிகர்

### டேவிஸ் ஹானோய் விஜயம்: பிரிட்டிஷ் பார்லிமெண்டில் கட்சிகள் மோதல்

### வியட்காங்கியர் மீது அமெரிக்கர் பெருந்தாக்குதல்: 14 மணி நேரம் தொடர்ந்து சண்டை

சைகோன், ஜுலை 9

**ஜெனரல் மாக்ஸ்வெல் டெய்லர் ராஜினமாச் செய்துவிட்டார். அவருக்குப் பதிலாக முன்பு தென்வியட்னுமில் அமெரிக்கத் தூதராக இருந்த திரு. ஹென்றி கெபாட்லொட்ஜ் மீண்டும் அமெரிக்கத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஜெனரல் டெய்லரின் ராஜினமாவை வருத்தத்துடன் ஏற்றுக் கொள்வதாக ஜனதிபதி ஜோன்ஸன் அவருக்குத் தெரிவித்திருக்கிறார். டெய்லரின் கடந்த கால சேவையை அவர் புகழ்ந்துரைத்தார்.**

தென்வியட்னுமில் தாம் அமெரிக்கத் தூதராகப் பதவி யேற்றபோது ஒருவருடம் மட்டுமே கடமையாற்ற முடியும் என்ற நிபந்தனையின் பேரிலேயே அப்படிச் செய்ததாயும் இப்போது இந்தத் தவணை முடிவடைவதாலும் சொந்தக் காரணங்களினுலும் தாம் ராஜினமா செய்வதாயும் ஜனதிபதி ஜோன்ஸனுக்கு அனுப்பியுள்ள ராஜினமாக் கடிதத்தில் ஜெனரல் டெய்லர் கூறியிருக்கிறார். மீண்டும் புதிய ஸ்தானிகர் பதவியை ஏற்றிருக்கும் திரு லொட்ஜ் சென்ற ஆண்டுவரை தென்வியட்னுமில் அமெரிக்கத் தூதராக இருந்தார்.

பதவியிலிருந்து விலகும் டெய்லர் நேற்றிரவு அளித்த பேட்டி ஒன்றில் வியட்னுமில் படைபலத்தின் மூலம்மட்டும் வெற்றிபெற முடியாது என்றும், அரசியல், பொருளாதாரம், படைபலம், மனேதத்துவ அம்சங்கள் ஆகிய அனைத்தையும் ஒன்றுபடுத்தியே வெற்றிபெற முடியுமென்றும் கூறினர்.

**மக்னமாரா சைகோன் வருவார்**

வருகிற புதன்கிழமை திரு. லொட்ஜும், அமெரிக்க பாதுகாப்புமந்திரி திரு மக்னமாராவும் தென்வியட்னுமுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்கள். ஜெனரல் டெய்லருடனும், தென்வியட்னும் தலைவர்களுடனும் அவர்கள் பேச்சு நடத்துவார்கள் என அறிவிக்கப்படுகிறது.

ஜெனரல் டெய்லரின் ராஜினமாவினல் அமெரிக்காவின் வியட்னும் கொள்கையில் எவ்வித மாறுதலும் இருக்காது என அறிவிக்கப்பட்டது.

**1 லட்சம் துருப்புகள்**

தென்வியட்னுமுக்கு மேலும் மேலும் அமெரிக்கத் துருப்புகள் அனுப்பப்படுவார்கள் என்றும், வருகிற கோடை காலத்திற்கு முன்னர் 1 லட்சத்திற்கு மேற்பட்ட அமெரிக்க வீரர்கள் அங்கிருப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

**ஹானோயில் டேவிஸ்**

இதற்கிடையில் பிரிட்டிஷ் உதவிமந்திரி திரு. ஹரோல்ட டேவிஸ் ஹானேய் வந்து சேர்ந்திருக்கிறர். வடவியட்னும் தலைவர்களை அவர் ஏற்கனவே சந்தித்துப் பேசினர் என்றும், ஜனதிபதி ஹோசிமின் அவரது நண்பர் என்றும், காமன்வெல்த் அமைதிக் குழுவை அனுமதிக்குமாறு அவர் ஹோசிமினை வற்புறுத்துவார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

**காமன்ஸில் அமைதி**

திரு. டேவிஸ் ஹானேய்க்கு அனுப்பப்பட்டது குறித்து நேற்று காமன்ஸ்சபையில் அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சியினருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. அரசாங்கத்தினதும், சமாதானக் குழுவினதும் சம்மதத்துடனேயே திரு. டேவிஸ் அங்கு செல்கிறர் என்றும் அவரது பிரயாணம் பற்றி அமெரிக்காவுக்குத் தெரிவிக்கப்பட்டது என்றும் பிரதமர் வில்சன் எதிர்க்கட்சியினருக்குப் பதிலளித்தார். கன்சர்வேட்டிவ் கட்சியினர் அரசாங்கத்தின்மீது ஒரு கண்டனத் தீர்மானம் கொண்டுவரவும் முயன்றனர்.

லண்டனிலுள்ள வடவியட்னும் அதிகாரிகள் திரு. டேவிஸை ஹானேய்க்கு அழைத்ததாகக் கூறப்பட்டது.

**யுதாண்ட்**

இதற்கிடையில் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் பாரிசில்நேற்று பிரெஞ்சு வெளிவிவகார மந்திரியைச் சந்தித்து வியட்னும் நிலைமைபற்றிப் பேசினர்? இன்று லண்டனில் அவர் பிரிட்டிஷ் பிரதமருடன் காமன்வெல்த் அமைதிக்குழுபற்றிப் பேசினர். ஏற்கனவே ஐ. நா.வுள்ள அமெரிக்கப் பிரதிநிதி திரு. ஸ்டீவன்ஸனுடன் அவர் வியட்னும்பற்றிப் பேசியிருக்கிறர்.

வியட்னும் பிரச்னை மேலும் கடினமடைந்திருப்பதாய் யுதாண்ட் தெரிவித்தார்.

**வடகொரியா ஆட்சேபம்**

தென்வியட்னுமில் வியட்காங்கியருக்கு எதிராகப் போரிட தென்கொரிய துருப்புகளை அனுப்புவது சம்பந்தமாக வடகொரியா ஆட்சேபனை தெரிவித்திருக்கிறது. இதனல் வியட்காங்கியருக்கு வடகொரியா ஆயுத சப்ளை செய்யப் போவதாக அது கூறியது.

**பெரும் சண்டை**

நேற்று அமெரிக்க, ஆஸ்திரேலிய, தென்வியட்னும் துருப்புகள் சைகோனுக்கு வடக்கே அடர்ந்த காட்டில் வியட்காங்கியருடன் மிகப்பெரும் சண்டையில் ஈடுபட்டன. இச்சண்டையில் 100க்கு அதிகமானேர் கொல்லப்பட்டதாயும், பல வியட்காங் கிராமங்கள் அழிக்கப்பட்டதாயும், சண்டை 14 மணிநேரம் நடைபெற்றதுஎன்றும் அறிவிக்கப்படுகிறது.

## அண்ணுதுரை – கருணநிதி கருத்துவேற்றுமை?

### கட்சித் தலைமையில் மாறுதல் ஏற்படும் என வதந்திகள்

சென்னை, ஜுலை 9

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்காரியதரிசி பதவியிலிருந்து திரு. ஸி. என். அண்ணுதுரை விலகமாட்டாரெனத் தெரிவதாகக் கூறப்படுகிறது. அடுத்த செப்டம்பரில் அவருக்கு 57 வயதாகிறது.

தி. மு. க. பொதுச்சபைத் தலைவரும், அசெம்பிளியில் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. நெடுஞ்செழியனும் திரு அண்ணுதுரையும் கட்சித் தலைமையிலும், கீழ்மட்டங்களிலும் கருத்துவேறுபாடுகள் நிலவுவதை அறிந்திருக்கிறர்கள் என்றும், ஆனல் அடுத்த பொதுத்தேர்தலுக்கு இன்னும் பதினெட்டு மாதங்களே இருப்பதாயும் தற்போதிருந்தே காங்கிரஸ்கட்சி தேர்தல் பிரசாரத்தில் இறங்கிவிட்டதாலும் தி. மு. க. தலைமையில் மாற்றமேற்படுத்த இது சரியான தருணமல்லவெனக் கூறப்படுகிறது.

மொழிப் பிரச்னையின் மீது காங்கிரஸுடன் போட்டியிடத் தயாரென ஏற்கனவே திரு. அண்ணுதுரை தெரிவித்திருக்கிறர்.

திரு. கருணநிதி அடுத்த பொதுக்காரியதரிசியாக இருக்கவேண்டுமென தி. மு. க. பிரமுகர் ஒருவர் விடுத்த அறிக்கையைத் தொடர்ந்து கட்சியில் பிளவு ஏற்படும் சாத்தியம் பற்றி தகவல்கள் நிலவின.

ஆனல் பிளவென்பதைக் கருணநிதி மறுத்ததுடன் அண்ணுதுரையுடன் பலப்பரீட்சை என்ற சாத்தியக்கூற்றையும் அவர் மறுத்தார்.

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி இதர விஷயங்கள் சம்பந்தமாக அண்ணுதுரைக்கும் கருணநிதிக்குமிடையே பலத்த கருத்துவேறுபாடு இருப்பதாகக் கூறப்படுவதையும் அவர் மறுத்தார். எனினும் கழகத்தின் பொதுக்காரியதரிசிப் பதவிக்குத் தாம் போட்டியிடப்போவதில்லை என்று திட்டவட்டமாக அவர் குறிப்பிடவில்லை.

1966 செப்டம்பரில் அண்ணுதுரையின் 58வது பிறந்த தினம் கொண்டாடப்படும் போது தி. மு. க. தேர்தல் நிதியாக ரூபா பத்து லட்சம் முடிப்புத் தரத் தாம உத்தேசித்துள்ளதாகவும் கருணநிதி தெரிவித்தார்.

## பூனவில் செயற்கை கிரக தகவல் நிலையம்

பூனு, ஜுலை 9

செயற்கைக் கிரகம் மூலம் தகவல் பெற பூனவுக்கருகே தரையில் ஒரு தகவல் நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. 1967ம் ஆண்டு இறுதிக்குள் இது பூர்த்தியாகும். இதற்கு 8 கோடி ரூபாய் செலவிடப்படும். அமெரிக்க செய்மதி "ஏர்லிபேர்ட்" ஏற்கனவே அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையே டெலிவிஷனில் அஞ்சல் செய்துவருகிறது.

## "கட்ச் விஷயத்தில் மத்தியஸ்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை"

### இந்தியப் பிரதமர் அறிவிப்பு

புதுடில்லி, ஜுலை 9

கட்சில் இருபகுதித்துருப்புகளும் வாபஸ்பெற்றதைத் தொடர்ந்து, இருதேச அதிகாரிகளினதும் மூன்றாவது கூட்டம் பாகிஸ்தானில் நடைபெறும் என இந்தியப்பிரதமர் திரு. சாஸ்திரி கூறினர்.

கட்ச் ஒப்பந்தப்படி மந்திரிகளுக்கிடையேயான கூட்டத்துக்காகவும் இந்தியா ஏற்கனவே பாகிஸ்தானுடன் தொடர்புகொண்டிருப்பதாக அவர் கூறினர்.

கட்ச் விஷயத்தில் மத்தியஸ்த தீர்ப்புக்கே இடமில்லையென்றும், விசாரணை மன்றத்திடம் தஸ்தாவேஜுக்களும், ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்படும் என்றும், ஆனல் மத்தியஸ்தம் கிடையாது என்றும் சாஸ்திரி குறிப்பிட்டார்.

இதற்கிடையில் கட்சில் சண்டைநிறுத்த அமுல்பற்றி இந்தியாவும், பாகிஸ்தானும் ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு முறைப்படி தெரிவித்திருக்கின்றன.

## ஜயப்பிரகாஷ்

கல்கத்தா, ஜுலை 9

நாகாலந்து பிரச்னைபற்றி மனத்தளர்ச்சிஅடையத்தேவையில்லை என ஜயப்பிரகாஷ் நாராயணன் இங்கு கூறினர். நாகா அமைதிப்பேச்சில் கலந்துகொள்ளும் அரசாங்கக் கோஷ்டியின் அந்தஸ்தை உயர்த்தவேண்டும் என பலைவர்கள் விரும்புவதாயும் அவர் கூறினர்.

## கி.ஆ.பெ.விசுவநாதன் தண்டனை குறைகிறது

திருச்சி, ஜுலை 9

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின்போது ஆட்சேபகரமான துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு நடந்த வழக்கில் திரு கி. ஆ. பெ. விசுவநாதனுக்கு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் முன்பு 8 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஆனல் அப்பீல்காரரின் வயதை உத்தேசித்து இவரது தண்டனையை ரூபா 1000 அபராதமாக ஜில்லா செஷன்ஸ் நீதிபதிமாற்றி உத்தரவிட்டார்.

## 3 நாட்களில் 3-வது விமான விபத்து

ஒட்டாவா, ஜுலை 9

கனடியன் பசிபிக விமானக்கம்பனியைச் சேர்ந்த ஒரு பிரயாணிகள் விமானம் 52 பேருடன் பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கருகில் நொருங்கிவிழுந்தது. கடந்த 3 தினங்களில் ஏற்பட்ட மூன்றுவது விமான விபத்து இது.

## தென்னுபிரிக்க தர்பார்

கேப்டவுன், ஜுலை 9

தென்னுபிரிக்க வாசியான ஒரு இந்தியத் தாய் தனது குழந்தையை இந்தியாவிலிருந்து தென்னுபிரிக்காவுக்குக் கொண்டுவர அந்நாட்டு அரசாங்கம் அனுமதிமறுத்திருக்கிறது. அரசாங்கத்திற்குச் சார்பான பத்திரிகை ஒன்று இதுகுறித்து அரசாங்கத்தின் கடவடிக்கையைக் கண்டித்திருக்கிறது.

## இங்கிலாந்து விளாசல்

லண்டன், ஜுலை 9

இங்கிலாந்துக்கும் நியூஸிலாந்துக்குமிடையே இங்கு ஆரம்பமான 3-வது இறுதி டெஸ்டில் நேற்று ஆட்டத்தின் முதல் நாளன்று இங்கிலாந்து ஒரு விக்கெட் நஷ்டத்திற்கு 366 ரன்கள் எடுத்தது. எட்ரிச் 194 ரன்களும், பெரிங்டன் 152 ரன்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருக்கிறர்கள்.

## ஸ்ரீநகர் சர்வதேச விமான நிலையமாகும்

புதுடில்லி, ஜுலை 9

ஸ்ரீநகர் விமானநிலையத்தில் ரடார்சாதனம் பொருத்தப்படவிருக்கிறது, அதனுடன் ஸ்ரீநகரை ஒரு சர்வதேச விமானநிலையமாக அபிவிருத்தி செய்யும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

## 600 அறிஞர்கள் கூடிய நூற்றுண்டு விழா

பெர்லின், ஜுலை 9

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் ஜேனு பல்கலைக்கழகத்தின் பிராணிசாஸ்திர வித்தியாபீடம் நிறுவி 100 ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 600 அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

இந்த வித்தியாபீடத்தின் ஸ்தாபகரான ஏர்னஸ்ட் ஹெக்கல் ஜெர்மனியில் டார்வின் கொள்கையைப் பிரச்சாரம் செய்தவராவர். மனித இனத்தின் ஆரம்பம்பற்றி பல நூல்களை அவர் எழுதியுள்ளார்.

ஜேனு பல்கலைக்கழகம் 1558-ல் நிறுவப்பட்டதாகும். கார்ல்மார்க்ஸ் இப்பல்கலைக்கழகத்தில்தான் கலாநிதி பட்டம் பெற்றார்.

## போலந்து பகுதிக்கு உரிமை

போன், ஜுலை 9

போலந்தின் சில பகுதிகள் மேற்கு ஜெர்மனிக்குச் சொந்தமானவை என்ற கோரிக்கையை மேற்குஜெர்மன் ஜனதிபதி லூட்விக் எர்ஹாட் ஆதரிக்க முன்வந்துள்ளார். சென்ற யுத்தம் முடிவடைந்தும் நேசநாடுகள் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி போலந்துக்குச் சொந்தமான ஸைலேஸியா மாகாணத்தில் வசிக்கும் சிலர் ஸ்தாபித்துள்ள ஒரு ஸ்தாபனம் இந்தக் கோரிக்கையை வற்புறுத்துகிறது.

இந்தப் போலந்துப்பிராந்தியத்தை மீட்பதில் பலாத்காரத்தை மேற்குஜெர்மன் அரசாங்கம் பிரயோகிக்காதென்றும் ஆனல் ஜெர்மன் உரிமையை விட்டுக் கொடுக்கமாட்டோம் என்றும் ஜனதிபதி எர்ஹாட் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

## கடற்படை பயிற்சி

சென்னை, ஜுலை 9

ஐ. என். எஸ். மைசூர் கப்பலும், வேறு சில இந்தியக் கடற்படைக் கப்பல்களும் பிரிட்டிஷ் நீர்மூழ்கி ஒன்றுடன் 3 வாரங்கள் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கின்றன.

# "புது எழுதுவினைஞர் பற்றி அக்கறை காட்டவில்லை"

## அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் மீது கண்டனம்

யாழ்ப்பாணம், சனி

'அரசாங்க புது எழுதுவினைஞர்கள் (1956-ம் வருடத்துக்குப்பின் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்கள்) சிங்களம் மட்டும் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதைவிட்டு அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாதிருப்பது அரசாங்க புது எழுதுவினைஞரிடையே மிகுந்த வேதனையையளித்துள்ளது" என அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் துணைச்செயலாளர் திரு. மு. மருதபிரான் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் சென்ற புதன்கிழமை மாலை நடைபெற்ற அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ். கிளைக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கிளைத்தலைவர் திரு த சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு மருதபிரான் மேலும் கூறியதாவது:-

எம்மிடையே பழைய ஊழியர் புதிய ஊழியர் என்ற பாகுபாடு இருப்பது நல்லதல்ல. இந்தவித பாகுபாடின்றி ஒரே இலட்சியத்துக்காகப் போராடவேண்டும். இந்தப் போராட்டம் தொடர்ந்த போராட்டமாக இருக்க வேண்டும். இவ்வித தொடர்ந்த போராட்டம் மூலமாகவே நாம் நமது இலட்சியத்தை அடையமுடியும்.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு த சுப்பிரமணியம், உப-தலைவர்கள் திரு அ இ வேதநாயகம், திரு க இரத்தினசபாபதி, செயலாளர் திரு ஏ வித்தியானந்தசர்மா, துணைச்செயலாளர் திரு மு மருதபிரான், பொருளாளர் திரு த தர்மலிங்கம்.

10 உறுப்பினர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

---


REGAL - JAFFNA
NOW SHOWING

James Mason
John Mills
in
TIARA TAHITI
(Eastman color)


## வடபகுதியில் கூட்டுறவு விழா

சுழிபுரம், வெள்ளி

வடபகுதியிலுள்ள பல நோக்கு இயக்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கூட்டுறவுத்தின விழாவை இம்மாதம் 15, 16, 17-ம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடத்த ஏற்பாடுகள் செய்துவருகின்றன. முதல்நாள் விழாவை காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வா ஆரம்பித்துவைப்பார். விழாவையொட்டி பல போட்டிகள் நடாத்தவும் ஏற்பாடாகியுள்ளது. விழாவிற்கான ஆயத்தங்களையும் வடபகுதி ஐக்கிய மேற்பார்வை சபையினர் கவனித்து வருகின்றனர்.

---

## பொங்கல் விழா


யாழ்ப்பாணம், சனி

தொண்டைமானாறு செல்வச்சன்னதி பொங்கல் விழா திங்கட்கிழமை இரவு நடைபெறும். அன்று கண்ணகை அம்மன் படிப்பு நடைபெறும்.


மகத்தான 2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கும்டவித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (மட்டல்)

என். டி. ராமராவ், அஞ்சலிதேவி,
ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா,
மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா
மற்றும் பலர் நடித்த



லவகுசா

(முழுநீள கலர்ப்படம்)

உலகம் போற்றி புகழும் இராமாயண காவியத்தின் தித்திக்கும் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ்திரைகளில் பார்த்து மகிழுங்கள்!


## யாழ்ப்பாணத்தில் ஜினதாச எண்ணெய்கள்

யாழ்ப்பாணம் வெள்ளி

ஆயுர்வேத வைத்தியர் டபிள்யு கே. ஜினதாச தயாரிக்கும் கேத்திராலோக தைலம், கஸ்தூரி கல்பயோகம் ஆகியவையும், மற்றும் எண்ணெய் மருந்துவகைகளும் இடமே முதுஏஜெண்டுகள் மூலம் யாழ்ப்பாணத்தில் விநியோகம் செய்யப்படுகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல கில்லறைக் கடைகளிலும் கொழும்பு விலைக்கே விற்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## அனாமதேய பிரவேசப்பத்திரம்!

உடுப்பிட்டி, வெள்ளி

இம்மாதம் 10-ம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்ட மத்திய எழுதுவினைஞர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான பிரவேசப் பத்திரங்கள் பலருக்கு இன்றுவரை அனுப்பப்படவில்லை. ஒரே கிராமத்தில் ஒரே சமயத்தில் விண்ணப்பித்தவர்களில் சிலருக்கே பிரவேசப் பத்திரங்களும் நேரகுசிகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கரணவாயிலுள்ள ஒரு பரீட்சார்த்திக்கு பெயர், விலாசம், சுட்டிலக்கம், பரீட்சை நிலையம் எதுவுமே எழுதப்படாத அனாமதேயப் பிரவேசப்பத்திரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

---

## பாடசாலை விளையாட்டுப்போட்டி

கோண்டாவில், வெள்ளி

கன்னுகம் பொன். கந்தையா அரசினர் பாடசாலையின் மஞ்சள், நீலம், சிவப்பு ஆகிய இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளின் முடிவு வருமாறு:-

100 யார் ஓட்டம்:- மேற்பிரிவு - ஆண்கள்- வே ஏழுமலைநாதன், சி பரஞ்சோதி, சி திருப்பதி.

பெண்கள்- த பத்மாவதி, செ மகேஸ்வரி, க செல்வராணி.

கீழ்ப்பிரிவு:- ஆண்கள்- மு ரஞ்சன், சி சிவராசா, சி யோகநாதன்.

பெண்கள்- ஏ சிவபாக்கியம், மா ரதி, மு ரஞ்சினி.

மத்திய பிரிவு: ஆண்கள்- வே ஜெயக்கொடி, இ சிவலிங்கம், சி சிவகுமார்.

பெண்கள்- க சத்தியேஸ்வரி, மா லோகேஸ்வரி, இ விமலாதேவி.

220 யார் ஓட்டம்:- மேற்பிரிவு- ஆண்கள்- மு அமிர்தலிங்கம். வே ஏழுமலைநாதன், கு துரைராசா,

பெண்கள்- த பத்மாவதி, க சத்தியேஸ்வரி, க செல்வராணி.

கயிறடித்தல்.- மேற்பிரிவு- பெண்கள்- க பத்மாதேவி க செல்வராணி, வே சந்திரவனிதாமணி

மத்திய பிரிவு- க சத்தியேஸ்வரி, மா லோகேஸ்வரி, செ இந்திராணி.

கீழ்ப்பிரிவு- இ தவமணி, மு தெய்வநாயகி, சி தங்கேஸ்வரி.

தடை ஓட்டம்:- ஆண்கள்- மு அமிர்தலிங்கம், வே ஏழுமலைநாதன், கு துரைராசா.

பெண்கள்- வே சந்திரவனிதாமணி, க செல்வராணி, க சத்தியேஸ்வரி

சமநிலை ஓட்டம்:- மேற்பிரிவு- பெண்கள்- மு கிருபாம்பிகை, வே சந்திரவனிதாமணி, இ திரவிய புஷ்பம்.

மத்திய பிரிவு- இ விமலாதேவி, ப புனிதவதி, க சத்தியேஸ்வரி,

440 யார் ஓட்டம்:- ஆண்கள்- மு அமிர்தலிங்கம், வே ஏழுமலைநாதன், கு துரைராசா.

வினோத உடைப் போட்டி:- பெண்கள் - வே சந்திரவனிதாமணி, இ திரவிய புஷ்பம், செ மகேஸ்வரி.

ஆண்கள்- மு அமிர்தலிங்கம், செ தர்மகுலசிங்கம், இ சிவலிங்கம்.

# 'முயற்சியினுல்தான் வெற்றிகிட்டும்'

## மாணவர்களுக்கு எம். பி. புத்திமதி

கோண்டாவில், வெள்ளி

'மனிதனுடைய வாழ்வில் வெற்றியும் தோல்வியும் ஏற்படுவது சாஜம். தோல்வியைக் கண்டு மனம் சோராது வெற்றிக்காக உழைத்து வெற்றி பெறவேண்டும். தோல்வியடைந்ததினுல் ஏங்கி நிற்கும் சிறுவர்களுக்கு நான் ஒன்று கூற விரும்புகின்றேன். வெற்றி பெறுவதற்கு தகுதியில்லையே என்று சோர்ந்துவிடாது வெற்றிக்காக உழையுங்கள் அதனுல் நன்மை கிட்டும்'.

இவ்வாறு கன்னுகம் பொன் கந்தையா அரசினர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உடுவில் எம். பி திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

திரு. தருமலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

வாட்டர்லூ என்ற இடத்தில் நெப்போலியனுக்கும் பிரிட்டிஷ் தளபதி வெலிங்டனுக்கும் இடையே நடைபெற்ற யுத்தத்தில் வெலிங்டன் தளபதி வெற்றிவாகை சூடினர். அவரது வெற்றிக்குக் காரணம் அவர் விளையாட்டுக்களில் திறமை பெற்றிருந்ததே.

மாணவ மாணவிகள் விளையாட்டுப்போட்டிகளில் கலந்து வெற்றி பெறுவதோடு நின்றுவிடாது படிப்பிலும் ஊக்கம் காட்டி எதிர்காலத்தில் சிறந்த அறிஞர்களாகவும், வீரர்களாகவும் திகழவேண்டும்.

---

## சமாதானக் கொள்கை

பெர்லின், ஜூலை 9

கம்போடியாவில் தேசிய அசெம்பிளியின் உதவிச் சபாநாயகரும் பிரபல பத்திரிகையாளருமான பேராசிரியர் உன்-மூங் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு விஜயஞ் செய்து பலவாரங்கள் இங்கு தங்கியிருந்தார். இங்கு நடைபெற்ற சர்வதேசிய எழுத்தாளர் மகாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் அவர் நாடுமுழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்தார்.

"ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் சோஷலிஸ்ட் திட்டம் வெற்றிபெற்றிருப்பதைக்கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்நாட்டில் எங்கு பார்த்தாலும் தொழிலாளர்கள் ஒரு திட்டவட்டமான இலட்சியத்துடன் செயல்படுவதைக் காண்கிறேன். ஜெர்மன் ஜனநாயகக் குடியரசைப்போல எனது நாடும் உண்மையான சமாதானக்கொள்கையை பின்பற்றுகிறது" என்று பேராசிரியர் உன்-மூங் இமுக ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறினர்.

---

## கல்வி மசோதா இப்போது ஏது

பம்பலப்பிட்டி, வெள்ளி

மதசார்புள்ள பாடசாலைகளை நடத்தும் முகாமையாளர்கள் சமர்ப்பித்துள்ள விஷயங்களை குறித்து அவர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே கல்வி மந்திரி தேசிய கல்வி மசோதாவைச் சமர்ப்பிக்கவிருக்கிறர்.

அடுத்த மந்திரி சபைக் கூட்டத்தில் இந்த மசோதாபற்றி ஆலோசிக்கப்படுமெனவும் அதை அடுத்த பார்லிமெண்டில் சமர்ப்பிப்பதெனவும் முன்னர் உத்தேசிக்கப்பட்டிருந்தது.

---

## மாவுக் கப்பல் காங்கேசன்துறை வந்தது

மாவிட்டபுரம், வெள்ளி

"எஸ், எஸ். அல்க்யோல்" என்ற கிரீஸ் கப்பல் காங்கேசன்துறைக்கு வந்துள்ளது. இந்தக் கப்பல் ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு 11,400 தொன் மாவு ஏற்றிக் கொண்டுவந்துள்ளது.

கடந்த இருவருட காலங்களில் இப்படியான பெரிய கப்பல் ஒன்று இவ்வளவு தொகையான உணப்பொருளை ஏற்றிக்கொண்டு காங்கேசன்துறைக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கப்பலிலிருந்து மாவு வெள்ளிக்கிழமை இறக்குமதிசெய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

---

## 10,000 பேருக்கு வேலைவாய்ப்பு

### முத்துராஜவலை திட்டம் நிறைவேறினுல்

வத்தளை, வெள்ளி

முத்துராஜவலை நிலஅபிவிருத்தி திட்டம் அரசாங்கத்தினுல் மீண்டும் அமுல் நடத்தப்பட்டால் 10 000 பேருக்கு வேலைவாய்ப்பளிக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1957-ம் வருடத்தில் முந்திய அரசாங்கத்தினுல் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனுல் இது அமுல்நடத்தப்படவில்லை.

அரசாங்கம் இத்திட்டத்தை அமுல் நடத்துவதில் அக்கறை காட்டுவதாக இருந்தால் இப்பகுதியிலுள்ள மக்கள் இங்கு விவசாயம் செய்ய முன்வருவார்களென அறியப்படுகிறது.

---

## 2000 விண்ணப்பங்கள்

பம்பலப்பிட்டி, வெள்ளி

கொழும்புப் பகுதியில் வீடு கட்டுவதற்கு ஏற்ற 45 துண்டுக் காணிகளுக்கு இரண்டு ஆயிரத்துக்கு மேலானவர்கள் வீடமைப்பு இலாகாவுக்கு விண்ணப்பித்துள்ளதாக அறியப்படுகிறது. வீடமைப்பு இலாகா விரைவில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் இதுபற்றி தீர்மானிப்பார்கள்.

---

## 24,137 பெண்கள் தோற்றுவர்

### அரசாங்க குமாஸ்தாக்கள் பரீட்சைக்கு

பம்பலப்பிட்டி, சனி

இன்று நடைபெறும் அரசாங்க குமாஸ்தாக்கள் சேவைப் பரீட்சைக்கு 24 137 பெண்கள் தோற்றவிருக்கிறர்கள். இந்தப் பரீட்சைக்கு இம்முறைதான் பெண்கள் தோற்ற அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

---

## கலைக்கழக ஆண்டுவிழா

வட்டுக்கோட்டை, வெள்ளி

வட்டுக்கோட்டைக் கலைக்கழகத்தின் மூன்ருவது ஆண்டு நிறைவுவிழா வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை கலாநிலைய திறந்த வெளியரங்கில் நடைபெறும். டாக்டர் செல்லத்துரை விழாவிற்குத் தலைமை தாங்குவார். அன்று பல கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

---

## பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

பம்பலப்பிட்டி, வெள்ளி

அதலைதாபன சேவையில் குமாஸ்தாக்கள் வேலைக்கும் இதுபோன்ற மற்ற வேலைகளுக்கும் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளைச் சேர்த்துக்கொள்ள ஸ்தாபன அமைச்சு உத்தேசித்துள்ளது. இதற்கான ஒரு திட்டத்தை விரைவில் கொண்டுவரவிருக்கிறது.

## விளம்பரம்

### சாக்குத் தைக்கும் கேள்வி

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசத்தில் சாக்குகளை கன்னூல் தைத்து அடுக்கி (50) சாக்குகள் கொண்ட கட்டுகளாகக் கட்டித் தருவதற்குச் சாக்கு ஒன்றிற்கு எவ்வளவு கேட்கிறீர்கள் என்பதை எமக்கு 17-7-65 பகல் 12 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக உறைமேல் சாக்கு தைக்கும் கேள்வி என எழுதிப் பதிவுத் தபாலில் சமாசத்தின் தலைவருக்கு 111, பெரியதெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்புக. பிணைப்பணம் ரூ. 500/- கட்டி ஒப்பந்தம் செய்தல் வேண்டும். மற்றும் விபரங்களுக்கு டி விலாசத்திற்கு மனுச்செய்க.

முதலியார் வை. மகேசன்
தலைவர். 457


### வானொலி நிகழ்ச்சிகள் கொழும்பு

**சனி 10-7-65**

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 காதாஞ்சலி, 6-50 சைவ சிந்தனை, 6-55 கிறிஸ்தவ சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-60 சித்திரகானம், 1-00 கதம்ப இசை,

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 திரை இசை,

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 செய்திச்சுருள், 7-00 சங்கீதக்கச்சேரி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு 9-30 கலைநிகழ்ச்சி, 10-00 நேயர் விருப்பம்.

**ஞாயிறு 11-7-65**

காலை 6-45 காதாஞ்சலி, 6-50 சைவ சிந்தனை, 6-55 கிறிஸ்தவ சிந்தனை 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்த இசை, 7-45 கமிழோடிசை. 8-00 வெளநாதாஞ்சலி 8-15 தமிழ் முழக்கம், 8-30 ஞானாஞ்சலி, 9-00 விசேஷ நிகழ்ச்சி, 9-30 கிறிஸ்தவ கீதங்கள், 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர் விருப்பம், 1-00 குதூகலம்.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 பாட்டு, 5-45 திரை இசை.

இரவு 6-10 வாத்திய இசை, 6-15 தானவாத்தியக்கச்சேரி, 6-45 வீணை, 7-00 பாட்டு, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 மகளிர்க்கு — மாதர் நிகழ்ச்சி, 9-45 மாதர் கேட்டவை, 10-15 தேர்ந்த இசை.

---

### நூல்நிலையம் நிறுவ முயற்சி

சங்கரத்தை, வெள்ளி

சங்கரத்தை ஓடக்கரையில் ஓர் நூல்நிலையம் நிறுவுவதற்காக கீழ்க்கண்ட சபை ஒன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தலைவர்– திரு. க. மார்க்கண்டு, உபதலைவர்– திரு. க மருதகுட்டி, காரியதரிசி– திரு க. மருதபிள்ளை, உபகாரியதரிசி– திரு. வ. கந்தையா, தனாதிகாரி, திரு. க. மாரிமுத்து.

மேற்படி நூல்நிலையத்தை நிறுவ திரு. மருதகுட்டி தற்காலிகமாக நிலம் கொடுத்து உதவியுள்ளார்.

---

### பர்மாவின் உத்தரவு

ரங்கூன் ஜூலை 8

பர்மாவிலுள்ள சகல அந்நிய தூதராலயங்களும் தாங்கள் நடத்தும் மொழிப்பயிற்சி வகுப்புக்களை முடிவிடவேண்டும் என அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

## வேம்படி மகளிர் கல்லூரி விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

வேம்படி மகளிர் கல்லூரி இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பிரதமவிருந்தினராக திரு. ஐ.பி. துரைரத்தினம் கலந்துகொண்டார். திருமதி துரைரத்தினம் பரிசில்களை வழங்கினர்.

கீழ்ப்பிரிவு— 100 மீட்டர்– சி பத்மினி, பி சரோஜா, பி புஷ்பராணி, ஜே நித்தியாவதி

150 மீட்டர்— சி பத்மினி என் மாதினி, என் கருணாரஞ்சனி.

75 யார் கயிறடித்தல்— பி சுபத்திரா, வி பிரேமலதா என் சுசீலா

80 மீட்டர் தடைஓட்டம்— பி சரோஜா, என் மாலதி என் சத்தியபாமா.

உயரப்பாய்தல்— சி பத்மினி, ரி வாணி, பி சரோஜா, நீளப்பாய்தல்— பி புஷ்பராணி, எஸ் மாலதி, ஐ ஜெகதீஸ்வரி.

4X100 மீட்டர்— அஞ்சலோட்டம்— கோன்வில் இல்லம், சவ்கொறப்ற் இல்லம்- கீறீடி இல்லம்.

கிரிக்கெட்பந்தெறிதல்—என் சுபத்திரா, என் சுசீலா, எஸ் கருணாதேவி.

**மத்தியபிரிவு**

100 மீட்டர்— ஆர் சாந்தா, பி புனிதவதி, சி கனகாம்பிகை.

150 மீட்டர்— ஆர் சாந்தா, எஸ ரேவதி, பி சுகந்தீ.

75 யார் கயிறடித்தல்— என் தேவகி, எஸ் மனோகரி, எம் சம்சாத்.

80 மீட்டர் தடைஓட்டம்– வி பத்மினி, சி கனகாம்பிகை, என் சரோஜா

உயரப்பாய்தல்— பி மகேஸ்வரி, எஸ் பாக்கியலட்சுமி, பி சந்திரா.

நீளப்பாய்தல்— பி. அருந்தவராணி, சி கனகாம்பிகை, ஆர் சாந்தா, எஸ மனோகரி.

கிரிக்கெட்பந்தெறிதல்— தி சுலோசனா, பி ஜெயந்தா, எஸ இரமணி.

குண்டெறிதல்— எஸ் இரமணி, பி மகேஸ்வரி, ஜி சுலோசனா.

4X100 மீட்டர் அஞ்சலோட்டம்— விதி இல்லம், கிறீடி இல்லம்.

**மேற்பிரிவு**

100 மீட்டர்— ரி மாதிதி, பி வனஜா, எஸ ரஞ்சனா.

200 மீட்டர்— ரி மாதிதி, கே இந்திராணி, ஏ லக்கந்தமலர்.

75 யார் கயிறடித்தல்— எம் மீனாம்பிகை, கே இந்திராணி, கே இராஜேஸ்வரி.

80 மீட்டர் தடைஓட்டம்– டபிள்யு இன்பவதி, எம் மீனாம்பிகை, ஏ லக்ஷ்மி.

உயரப்பாய்தல்— எஸ ஜெகசோதி, வி பம்சிராணி டபிள்யு இன்பவதி.

நீளப்பாய்தல்— சி ஜெகனா, ரி மாதிதி, பி வசந்தி

பரிதிவட்டமெறிதல்— எம் சிவயோகவல்லி, கே ஞானாம்பிகை, ஏ சிறீதேவி.

குண்டெறிதல்— கே ஞானாம்பிகை, ஏ சிறீதேவி, கே. விஜயலட்சுமி,

4X100 மீட்டர் அஞ்சலோட்டம்— விதி இல்லம், கிறீடி இல்லம், கோன்வில் இல்லம்.

சாம்பியன் பரிசுக் கிண்ணங்கள் பெற்றவை—

கீழ்ப்பிரிவு—பத்மினி குமாரசுவாமி (சவ்கொறுவ்ற் இல்லம்) மத்தியபிரிவு— சாந்தா இரத்தினசிங்கம் (கிறீடி இல்லம்), மேற்பிரிவு— மாதிதி திசநாயகம் (விதி இல்லம்)

கிறீடி இல்லம் 94 புள்ளிகள், விதி இல்லம்-கோன்வில் இல்லம் 92 புள்ளிகள், சவ்கொறப்ற் இல்லம் 85 புள்ளிகள்.

### அபிஷேகமும் அன்னதானமும்

சங்கரத்தை, வெள்ளி

சங்கரத்தை முருகமூர்த்தி கோவிலில் நாளை சனிக்கிழமை பகல் விசேட அபிஷேகமும் சமூக அர்ச்சனையும் அன்னதானமும் நடைபெறும், மாலை பல கலைநிகழ்ச்சிகள் இடம் பெறும்.

---

### சைவமும் . . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவிட்டுள்ள நூல்களின் அறிமுக விழாக்களையும் நடத்தி ஈழத்து இலக்கியச் செல்வர்களுக்கு உற்சாகமூட்டியும் வந்திருக்கிறது.

**பொதுப்பணி**

இவ்வாறு கடந்த முப்பது ஆண்டுகளாக மொழி, கலாசாரம், சமூக உணர்ச்சி, கிராம அபிவிருத்தி, சிரமதானமுயற்சி ஆதியனவற்றை விடாமற் செய்துவரும் இச்சபை இன்றும் இளமைகுன்றா வேகத்துடன் முன்னணியான ஆக்கவேலைகளைக் கருக்கொண்டு வருகின்றது.

சபையின் வளர்ச்சிக்குப் பொறுப்பான அங்கத்தவர்கள் மாத்திரமல்ல கிராமத்தில் வாழ்கின்ற மக்களும் அதிக உற்சாகமும் உழைப்பும், பக்தியும் ஈமுங்கி வருகிறார்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கிராம முன்னேற்றச் சங்கங்களுக்குள் மாத்திரமல்ல அகில இலங்கையிலுமுள்ள கிராம முன்னேற்றச் சங்கங்களுள் முன்னணியில் வந்து அரசாங்கிய பரிசில்களையும் இச்சபை பெற்றுத் தன்சேவையை உலகுக்குணர்த்தியுள்ளது.

**முப்பதாவது ஆண்டு நிறைவுவிழா**

முப்பது ஆண்டு என்பது சாதாரணகால எண்ணிக்கை அல்ல. மனித பருவத்தில் மிகப்பெரிய காலப்பகுதி இன்று நாட்டில் அவ்வப்போது பல சங்கங்கள் தோன்றி ஒருசில வருடங்களுக்குள் மூச்சிழந்து சில வருடத்துள் இருந்த இடம் தெரியாமல் மறைந்திருப்பதை கண்டிருக்கிறோம். அந்த சமங்கல அற்ப ஆயுளல்லாது முப்பது ஆண்டுகள் தொடர்ந்து இயங்கி இன்னும் பல்லாண்டு நிலைத்து ஆக்கப்பணி புரியும் தன்மையும் இச்சங்கம் நேற்று முதல் நாளைவரை முத்தமிழ் விழாவைக் கொண்டாடுகிறது. இலங்கை பூராவிலுமுள்ள சிறந்த அறிஞர்களும் பலர் இதில் பங்குபற்றுகிறார்கள். உள்ளூர் வெளியூர்க் கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகளும் நிகழ்கின்றன. முப்பதாண்டு காலமாக இச்சபை செய்த சேவை, சபையின் சரித்திரம், பணியாற்றிய தொண்டர்கள், காலமாகிய தொண்டர்கள், சேவைகள் அவற்றின் பலாபலன்கள் என்பனபற்றிய விபரங்களை அடக்கிய மலர் ஒன்றை மிகவும் கலைமெருகுடன் அச்சிட்டு விழாவில் வெளியிடுகின்றனர்.

---

### கார் திருட்டைத் தடுக்க நடவடிக்கை

பம்பலப்பிட்டி, வெள்ளி

கொழும்புக் கோட்டையிலும் புறக்கோட்டையிலும் கார்கள் திருட்டுப்போவதைத் தடுக்க சிவில் உடைபணிந்த 30 பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். சமீப காலங்களில் வாரத்தில் இரு கார்கள் வீதம் திருட்டுப்போவதாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

கேப்கென்னடி, ஜூலை 9

17 அமெரிக்க வானவெளிப் பிரயாணிகள ஐஸ்லாந்தில் பயிற்சி பெறுமுகமாகச்சென்றிருக்கிறார்கள்.


## வரி விளம்பரம்

### கல்வி

ஜி. சி. இ. உயர்தர இரண்டாம் வருடத்தில் வைத்தியம், பொறியியல், கலை ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும், யுனிவேர்சிட்டி இன்ஸ்ரிரியூட்ஸ், கொக்குவில் ... கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் 596

---

ஜி. சி. ஈ. உயர்தர நிலையில் சித்தியடைந்து சர்வகலாசாலையில் இடம்பெறுத மாணவர்களுக்காக ஜி. ஏ. கியூ. வகுப்புகள் தற்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டுள்ளன, தாமதிக்காமல் உடன்சேருங்கள். பி. ஏ. வகுப்புகள் சில நாட்களுக்குள் ஆரம்பிக்க இருக்கின்றன. யுனிவேர்சிட்டி இன்ஸ்ரிரியூட்ஸ், கொக்குவில், கரவெட்டி / 107, வருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 600

---

இந்த மாதத்தில் ஜி. சி. ஈ. (சாதாரணம்) வர்த்தக வகுப்புகளில் சேரும் 15 மாணவர்களுக்கு இலவசக்கல்வி அளிக்கப்படும். யுனிவேர்சிட்டி இன்ஸ்ரிரியூட்ஸ், கொக்குவில், கரவெட்டி /107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் 601

---

தொய்வு, கசம், நீரழிவு, வெண்பிளை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவசம். மாதிரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள ஸ்ருடியோ ஒன்றிற்கு உற்சாகம் உள்ள பெண் காஷியர் தேவை மாதச் சம்பளத்தை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்:– விளம்பர இல. 627, ஈழநாடு மே. பா. யாழ்ப்பாணம். 627

---

வெள்ளி இரசம் வீடுகளுக்கு சென்று விற்பதற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை, 13-7-65 க்கு முன் நேரில் வரவும். 44/3, கல்லூரி ஒழுங்கை, நீர்வாவியடி, யாழ்ப்பாணம். 628

---

### விற்பனைக்கு

மேல்மாடிக்கு பைப்பில் தண்ணீர் எடுக்கக்கூடிய, மோட்டர் பம், ராங் விற்பனைக்கு உண்டு. வல்லவன், C/o யாழ்ரன் ஸ்ரோர்ஸ், கன்னாகம். 628


### 'மாணவப் பருவத்தில் குறள் கற்க'

யாழ்ப்பாணம், வெள்ளி

"செல்வமும் வாழ்க்கையும் நிலையில்லாதவை என்பதை மதவாதிகள் வலியுறுத்துவதோடு நின்றுவிட்டனர். நில்லாதனவற்றை நிலையென்று உணருவதைப் புல்லறிவு என்று கண்டித்த வள்ளுவர், அழியும் செல்வத்தைகூட அறவழியில் ஈட்டி, அறம் செய்து, பின்னர் பற்றொழிக்க வேண்டுமென்று கூறுகின்றார். மனிதருடைய வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்தை மாத்திரம் விளக்கினார்கள், ஏனையோர்கள். வள்ளுவர் மாத்திரந்தான், மனிதருடைய பிரச்சினைகளைப் பல்வேறு கோணங்களிலிருந்து ஆராய்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழிமுறைகளை வகுத்துள்ளார்" என திரு மு சிவானந்தம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வள்ளுவர் விழாவிலே கருத்துரை வழங்கும்போது குறிப்பிட்டார். மாணவ மன்றத் தலைவர் தலைமை தாங்கினார்.

மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:- விளையாட்டிலே சில விதிமுறைகளைக் கையாண்டு விளையாடினால்தான் அது விளையாட்டாக இருக்கும் விதிமுறைகளை மீறுவோர்கள் மத்தியஸ்தரால் எச்சரிக்கப்படுவார்கள். அது போலத்தான் உலக வாழ்க்கையில் நவுல் விளையாடும் பலருக்கு வள்ளுவர் குறள்கள் எச்சரிக்கை விடுக்கின்றன. பண்போடும், அன்போடும் அறிவோடும் வையத்தில் வாழாதவர்களை மரம் என்றும் விலங்கென்றும் வள்ளுவர் இடித்துரைத்து நல்லறிவு புகட்டுகிறார். இத்தகைய குறள்களை மாணவப்பருவத்திலேயே படித்துணர்ந்து வாழ்க்கையைச் செம்மைப்படுத்த வேண்டும்.

உயர்வகுப்பு மாணவர்மன்ற செயலாளர் நன்றி கூறினார்.

### ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சனுகை காட்டவேண்டுமென்று கல்லூரி அதிபர் கேட்டும் அனுமதி கிடைக்காததால் இம்முறை பரீட்சை எழுதி மேலான முறையில் தேறி, மெடிகலில் சேர இருப்பதாகவும் அறிந்தேன். இதைக்கேட்கப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவுமிருந்தது.

அரும்பித்த செஞ்ஞாயிறேய்க்கும்மடி அழகெழுதலாகா அருட்சேவடி, சுரும்பித்த வண்டினங்கள் சூழ்ந்தவடி சோமனையும் காலனையும் காய்ந்தவடி, பெரும்பித்தர் கூடிப்பிதற்றும்மடி பிழைத்தார் பிழைப்பறிய வல்லவடி திருந்து நீர்த்தென்கெடில நாடன்னடி திருவீரட்டானத் தெஞ்செல்வன்னடி.

— அப்பர் சுவாமிகள்.

---

### திருநகர் மக்களுக்கு புயல் நிவாரணம்

கிளிநொச்சி, வெள்ளி

சமீபத்தில் வீசிய சூறவளியினால் பாதிக்கப்பட்ட திருநகர் மக்களுக்கு சென்ற சனிக்கிழமை நிவாரண உதவி வழங்கப்பட்டது. முன்னாள் எம். பி. திரு ஏ. சிவசுந்தரம் திருநகர் மறுமலர்ச்சிச் சங்கச் செயலாளர் திரு. டி சற்குணநாதன், மற்றும் திருவாளர்கள் கே. பாலசிங்கம் எஸ் வைத்திலிங்கம், என். திருநாவுக்கரசு ஆகியோர் மேற்கொண்ட முயற்சி காரணமாகவே இவர்கள் நிவாரணஉதவி பெற்றார்களென அறியப்படுகிறது.

---

### உபசாரம்

கிளிநொச்சி, வெள்ளி

கரைச்சிக்காரியாதிகாரியாக இருந்து வடமராட்சிக்கு மாற்றலாகிச்செல்லும் திரு. ஆ. க. உ. வைகாசனுக்கும், திருக்கோணமலையில் இருந்து கரைச்சிக்கு காரியாதிகாரியாக வந்துள்ள திரு எஸ். பின்னநாயகத்துக்கும் கிளிநொச்சிக் காரியாதிகாரி கந்தோரில் கரைச்சிப்பகுதி கிராமசேவையாளர்களாலும் காரியாதிகாரி கந்தோர் உத்தியோகத்தர்களாலும் பிரிவுபசாரவைபவமும் வரவேற்பு வைபவமும் நடத்தப்பட்டது. திரு. விவைகு

### இடமாற்றம்

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவுக் கிராமக் கோர்ட்டில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு என். சமாரசாமி பிஸ்கால் மார்ஷலாக இடமாற்றலாகி மன்னாருக்குச் சென்றுள்ளார். இவரின் இடத்துக்கு திரு எம். சுப்பிரமணியம் இடமாற்றலாகி வந்துள்ளார்;

# 'பொருள் வளத்தை விருத்திசெய்ய எல்லோரும் உழைக்கவேண்டும்'

## உப்பு அள்ளுவிழாவில் வட்டுக்கோட்டை எம். பி: பேச்சு

சுழிபுரம், வெள்ளி

'கைத்தொழில், கமத்தொழில் மூலம் எமதுநாட்டின் பொருள் வளத்தை அபிவிருத்தி செய்ய தனியார், பொதுத் துறைகள் அதிகம் முன்வந்து உழைக்க வேண்டும். அப்போதுதான் எமது நாட்டு அன்னிய செலாவணிகள் மிச்சப்படுத்தப் படுவதுடன் நாமும் முன்னேறலாம்' என வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் கல்லுண்டாய் உப்பு அள்ளு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சமாஜத் தலைவர் திரு ஏ. வி. வேதாபரணம் விழாவுக்குத் தலைமை தாங்கினார். உப்பு இலாகா ஆணையாளர் திரு. கை. அமிர்தநாயகம் முதல் முறையாக உப்பை அள்ளி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

தலைவர் திரு. வேதாபரணம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

கூட்டுறவின் நோக்கம் அதிக லாபம் அடைவது அல்ல. இப்பகுதி மக்களின் தேவையைப் பூர்த்தியாக்குவதுடன் இலங்கை வாழ் மக்களின் சகல தேவைகளையும் இப்படியான சிறு அபிவிருத்தித் திட்டம் மூலம் நிறைவேற்ற கூட்டுறவு சமாஜங்கள் மேலும் பாடுபடவேண்டும். முதலாளித்துவம் குன்றிய மக்கள் கூட்டுறவு இயக்கங்கள் மூலம் தமது தேவைக்கு வேண்டியவற்றைச் செய்துகொள்ளலாம் என்பதை வலி. மேற்கு பலநோக்குச் சங்கங்களின் சமாஜத்தினரால் ஆரம்பித்து நடாத்தப்படும் கல்லுண்டாய் உப்பளம் மூலம் அறிந்துகொள்ளலாம். எமது பொருளாதார முன்னேற்றம் எமது கையில் தான் தங்கியுள்ளது. தேவையைக் குறைத்து எமது உழைப்பை அதிகரித்துக்கொள்ளவேண்டும்.

# காஷ்மீர் பிரச்னையில் இலங்கையின் நிலை

## பார்லிமெண்டில் ஜே. ஆர். விளக்கம்

கொழும்பு, வெள்ளி

காஷ்மீர்ப் பிரச்னை ஐ. நா. தீர்மானத்துக்கிணங்க தீர்மானிக்கப்பட வேண்டுமென்பதே இலங்கையின் நிலையாகும் என்று ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் தம்பதெனியா எம். பி. திரு ஆர். ஜி. சேனநாயகாவின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

"இந்தியாவும் பாகிஸ்தானும் இலங்கையின் நேசநாடுகள். இவ்விருநாடுகளின் உள்நாட்டு விவகாரத்தில் இலங்கை தலையிடமாட்டாது" என்று திரு. ஜயவர்த்தனா சொன்னார்.

திரு. ஆர். ஜி. சேனநாயகாவின் குறுக்கீடு ஒன்றுக்கு திரு ஜயவர்த்தனா பதிலளிக்கையில் "தகராறைத் தீர்த்துவைப்பதற்கு அங்கத்தவர் (ஆர். ஜி) காஷ்மீருக்குப் போகவிரும்பினால் அதற்கான செலவைக் கொடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது" என்றார்.

---

## இறக்குமதியை ஏற்குமா?

பம்பலப்பிட்டி, வெள்ளி

டாக்டர் என். எம். பெரேராவும் திரு. கெனமனும் கீழ்க்காணும் பிரேரணைக்கான முன்னறிவித்தலைக் கொடுத்துள்ளார்கள்.

அரசாங்க வர்த்தகம் கூட்டுத்தாபனம் நிறுவுதல், அத்தியாவசிய ரேஷன் பொருட்களனைத்தினதும் இறக்குமதியை ஏற்று நடாத்துவதற்கும் ஏற்றுமதி வர்த்தகத்திலும் அதன் முயற்சிகளை விஸ்தரிப்பதற்குமெனக் காலதாமதமின்றி அரசாங்க வியாபாரக் கூட்டுத்தாபனமொன்று நிறுவப்படவேண்டுமென இச்சபை கருதுகிறது.

---

ஹைதராபாத், ஜூலை 9

ஆந்திர பிரதேச முதன் மந்திரி திரு. பிரம்மானந்த ரெட்டி செரஞ்சிபுர தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதை ஆட்சேபித்துத் தாக்கல்செய்யப்பட்ட தேர்தல் ஆட்சேபனை மனு நிராகரிக்கப்பட்டது.

## புகையிரதத்தை வீழ்த்த முயற்சி

### சாரதியின் சாதுர்யம்

கொழும்பு, வெள்ளி

நேற்று மலைநாட்டிலிருந்து வந்துகொண்டிருந்த இரவு புகையிரத வண்டியைத் தடம்புரளச் செய்வதற்கு மேற்கொண்ட முயற்சி பற்றி மீசகம பொலிஸார் விசாரணை செய்கின்றனர். புகையிரதத்தை ஓட்டி வந்த என்ஜின் சாரதியின் சாதுரியத்தால் இவ்விபத்து தடுக்கப்பட்டது. தண்டவாளத்திலிருந்து 'சிலிப்பர்' கட்டைகள் அகற்றப்பட்டதைத் தூரத்திலேயே வரும்போது தெரிந்துகொண்ட என்ஜின் சாரதி ரயிலைச் சாதுர்யமாக நிறுத்தி விபத்திலிருந்து ரயிலைக் காப்பாற்றிக் கொண்டார்.

## தேசிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா 151-15 ரூபா பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:-

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 05 | X | 0965 | 03 | P | 0598 | 02 | Q | 0269 |
| 06 | N | 0985 | 10 | P | 0606 | 01 | A | 0961 |
| 01 | J | 0617 | 01 | J | 0711 | 08 | B | 0984 |
| 07 | V | 0340 | 10 | P | 0702 | 06 | H | 0819 |
| 06 | Q | 0592 | 09 | D | 0070 | 06 | P | 0723 |
| 12 | Z | 0346 | 07 | S | 0972 | 07 | L | 0602 |
| 07 | V | 0385 | 05 | B | 0222 | 04 | S | 0406 |
| 10 | Y | 0065 | 08 | Q | 0987 | 12 | C | 0189 |
| 10 | J | 0038 | 03 | X | 0533 | 08 | G | 067[illegible] |
| 12 | A | 0813 | 08 | Q | 0214 | 11 | K | 0649 |
| 03 | Y | 0185 | 08 | K | 0832 | 08 | Z | 0652 |
| 02 | C | 0717 | 02 | U | 0636 | 02 | H | 0605 |
| 01 | M | 0170 | 08 | K | 0583 | 01 | O | 0020 |
| 01 | C | 0094 | 04 | V | 0047 | 04 | V | 0484 |
| 05 | Z | 0779 | 01 | G | 0165 | 09 | O | 0938 |
| 12 | K | 0685 | 01 | H | 0989 | 02 | L | 0986 |
| 09 | K | 0009 | 07 | Q | 0163 | 04 | Y | 0678 |
| 05 | K | 0713 | 07 | E | 0990 | 12 | T | 0605 |
| 12 | T | 0914 | 03 | J | 0804 | 06 | O | 0180 |
| 11 | E | 0838 | 10 | T | 0879 | 01 | M | 0039 |
| 05 | M | 0817 | 09 | X | 0573 | 04 | A | 0802 |
| 02 | Q | 0252 | 11 | M | 0518 | 10 | O | 0424 |
| 06 | Q | 0990 | 04 | Z | 0848 | 01 | U | 0572 |
| 10 | O | 0503 | 09 | D | 0233 | 01 | O | 0495 |
| 13 | W | 0156 | 08 | F | 0223 | 03 | G | 0319 |
| 05 | N | 0354 | 07 | X | 0889 | 06 | C | 0738 |
| 11 | O | 0302 | 03 | P | 0084 | 09 | G | 0617 |
| 12 | E | 0017 | 03 | L | 0464 | 10 | P | 0124 |
| 05 | H | 0831 | 01 | Q | 0633 | 06 | E | 0439 |
| 12 | Y | 0655 | 05 | U | 0531 | 11 | O | 0427 |
| 10 | L | 0304 | 02 | T | 0578 | 06 | T | 0132 |
| 06 | L | 0993 | 09 | Q | 0255 | 11 | Y | 0497 |
| 11 | U | 0944 | 11 | K | 0943 | | | |
| 10 | F | 0280 | 04 | V | 0032 | | | |

## ஈழநாடு சூறாவளி நிவாரண உதவி

யாழ்ப்பாணம், சனி

"ஈழநாடு" சூறாவளி நிவாரண உதவிச் சபையாரால் சென்ற வியாழக்கிழமை (8-7-65) மயிலிட்டி, பலாலி ஆகிய இடங்களில் சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூபா 1060 வழங்கப்பட்டது.

---

## தமிழரசுக்கட்சியின் "மந்திரிசபை"

கொழும்பு, வெள்ளி

அரசாங்கத்துடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களை கவனிக்கவென தமிழரசுக்கட்சி பார்லிமென்டரிக் குழுவில் உள்ள ஒவ்வொரு எம். பிக்கும் ஒவ்வொரு அமைச்சு ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் பொது மக்களின் தேவைகளை விரைவில் கவனித்து, அது சம்பந்தமாக அரசாங்கத்துடன் நடவடிக்கை எடுக்கவே இவ்வித ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு எம். பிக்கும் ஒவ்வொரு அமைச்சு ஒதுக்கப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு:-

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு:- எஸ். ஜே. வி. செல்வநாயகம்; இராஜாங்க அமைச்சு: இ. மு. வி. நாகநாதன்; நிதி, மொழி அமைச்சு:- அ. அமிர்தலிங்கம்; நீதி அமைச்சு:- வி. ஏ. அழகக்கோன்; காணி நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சு:- எஸ். எம். இராசமாணிக்கம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், எஸ். மாணிக்கராசா; உணவு விவசாய அமைச்சு:- வி. என். நவரத்தினம்; கல்வி அமைச்சு:- செ. இராசதுரை, கா. பொ. இரத்தினம், வி. நவரத்தினம்; மீன்பிடி, கைத்தொழில் அமைச்சு:- க. துரைரத்தினம்; தபால் தந்தி, மராமத்து அமைச்சு:- எஸ். எம். மாணிக்கராசா; உள்ளூராட்சி ஸ்தலஸ்தாகனம் வி. தருமலிங்கம்; தேசியமய சேவைகள்:- சி. கதிரவேற்பிள்ளை; தொழில் வீடமைப்பு:- சி. கதிரவேற்பிள்ளை, செ. இராசதுரை; வர்த்தக அமைச்சு:- செனட்டர் மு. மாணிக்கம்; சமூகசேவை அமைச்சு:- கா. பொ. இரத்தினம்; சுகாதார அமைச்சு:- மு. மதுஅலி, வி. என். நவரத்தினம்.

தமிழரசுக்கட்சி பார்லிமெண்டரிக் குழுவின் காரியதரிசியாக திரு வி. நவரத்தினம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# மின்சார விபத்து விவகாரம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

கந்தர்மட வட்டார அங்கத்தவர் திரு எஸ். நாகராஜா பேசுகையில் மின்சாரவிபத்தினால் சமீபத்தில் ஏற்பட்ட மரணம் பற்றிய மரண விசாரணையின்போது திரு இராஜகுரியர் அளித்த சாட்சியத்தில் மாநகரசபைமீது குறைகூறியுள்ளது பற்றி வருத்தம் தெரிவித்தார்.

மேயர் திரு மகாதேவா இதுகுறித்து தமது அபிப்பிராயம் தெரிவிக்கையில் மாநகரசபை அங்கத்தவர் ஒருவர் தனிப்பட்டமுறையில் ஆராய்வின்றி சபை நிர்வாகம்பற்றி குறைகூறுவது மிக்க வருத்தத்தைக் கொடுப்பதாக அருவருப்பாகவும் நிர்வாகச்சீர்கேடு காரணமாக அந்த மரணம் ஏற்படவில்லையென்றும் கடற்கரையில் மின்சாரக்கம்பி யிருந்ததால் அது குருப்பிடித்து அறுந்து போயிருந்தது என்றும் எடுத்துக் காட்டினார்.

இப் பிரேரணையை வாபஸ் பெறுமாறு குவாசி எம் எம் சுல்தான், திரு. ஜே. எம் அழகையா ஆகிய அங்கத்தவர்கள் வேண்டுகோள் விடுத்தனர் ஆனால் திரு அ. அகுரியர் பதுக்கத்தை மேலும் இப்பிரேரணை வாக்குக்கு விடப்பட்டு 4—8 வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.

### இறைச்சி விவகாரம்

பொது மக்களுக்கு விநியோகிக்கப்படும் இறைச்சி வகை மிகவும் தரக்குறைவானதாக இருப்பதாகவும் இது பற்றி நகரசபை நிர்வாகஸ்தர்கள் முக்கியமாக சுகாதாரப்பகுதியினர் கவனிப்பதில்லையென் இதற்கான நகரசபைக் குழுவின் தீர்மானம் அமுல் நடத்தப் படவில்லையென்றும் குற்றமசாட்டப்பட்டது. இது பல அங்கத்தவர்கள் எதிர்ப்புக்குள்ளாகி மிகக் காரசாரமான பேச்சுகள் இடம் பெற்றன. இதன் உச்சக் கட்டத்தில் திரு. இராஜகுரியர் தம் தியேட்டர், மின்சாரம், இறைச்சி ஆகிய குழுக்களின் தலைவராக இருந்து செய்த சிபார்சுகள் எதுவும் அமுல் நடத்தப்படாமல் இருப்பதால் தாம் தலைவராக இருப்பதில் எவ்வித அர்த்தமுமில்லையென்றும் அக்குழுக்களின் தலைமைப் பதவியிலிருந்து தாம் ராஜினாமாச் செய்வதாகவும் சபைக்குத் தெரிவித்தார்.

### நியமனத்துக்கான கல்வித் தகைமை

யாழ். பொது நூல்நிலைய உதவி மேற்பார்வையாளர் நியமனம் பற்றியும் மிகக் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

18-வயதுக்கும் 30 வயதுக்குமிடையிலுள்ள ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட வேண்டுமென்று உதவி மேயர் திரு. கே. வி. தெய்வேந்திரம் கொண்டு வந்த பிரேரணையை வேண்டுகோளின் படி அவரே திருத்தி சிரேஷ்ட தராதரப் பத்திரம் பெற்ற ஒருவரை நியமிக்க வேண்டுமென்று பிரேரித்தார். இதற்கு எதிர்ப்பாக் திரு. பி. எஸ். சோமசுந்தரம் சிரேஷ்ட தராதர பத்திரம் பெற்ற ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமெனப் பிரேரித்தார். இப்பிரேரணைகள் வாக்குக்கு விடப்பட்ட போது சிரேஷ்ட தராதரப் பத்திரத்துடன் ஒருவர் நியமிக்க வேண்டுமென்ற பிரேரணை 9--7 வாக்குகள் பெற்று நிறைவேறியது.

---

### சட்டவிரோத....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரந்தரக்காரியதரிசியும், இராணுவ உயர்தர அதிகாரிகளும் யும் பாணத்துக்கு வந்த இராணுவ டபிரிவினரை அனுப்புவதற்கான இடங்களைப் பார்வையிட்டுச் சென்றிருந்தனர்.

---

### காகித உற்பத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எட்டப்பட்டது. 1964ம் வருடத்தில் நாளொன்றுக்குச் சராசரி 21 டன் உற்பத்தியானது. இதன்படி வருடமொன்றுக்கு 6,550 டன் உற்பத்தியாகியது. 1964ம் வருடத்தில் 808 வேலையாட்களாக இருந்தது. தண்ணீர்த்திட்டம் பூர்த்தியாக மற்றுமொரு இயந்திர சாதனம் பொருத்தப்பட்டதும் மூன்றுவது கட்டக் குறியளவு இந்த வருடத்தில் நிறைவு பெறும்.



## இசைவிழாவில் கௌரவிக்கப்படுவார்

நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு வீதியில் இன்று ஆரம்பமாகி பத்து நாள் வரை தொடர்ந்து நடைபெறவிருக்கும் அகில இலங்கை சங்கீத வித்வத்சபையின் இசைவிழாவில் மாணவ ஆதீன வித்துவான், சங்கீத வித்வமணி எஸ். உரித்திராபதி பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படவிருக்கிறார் யாழ்ப்பாணம் எம். பி. திரு ஜி ஜி பொன்னம்பலம் இசைவிழாவை ஆரம்பித்துவைப்பார்.

# பாதுகாப்பு அமைச்சு ஊழியர் பலர் திடீர் இடமாற்றம்

பம்பலப்பிட்டி, வெள்ளி

பாதுகாப்பு வெளி விவகார அமைச்சிலிருந்து முக்கிய தஸ்தாவேஜுகளடங்கிய 600 "பைல்கள்" காணாமல் போனது சம்பந்தமாக, ஆரிய சிங்கள சங்கத்தைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படும் அரசாங்க ஊழியர்கள் பலரை இரகசியப் பொலிசார் நேற்று விசாரணை செய்தனர். இந்த ஊழியர்களில் சிலர் திறைசேரியிலும் கடமையாற்றுகின்றனர். பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த ஊழியர் பலர் நேற்று முதல் இடமாற்றமும் செய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு வெளி விவகார அமைச்சின் (பிரஜாவுரிமைப் பிரிவு) உதவிக் காரியதரிசி பதவியிலிருந்து தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ள திரு. ஸ்டான்லி ஜயவீரா பொது சேவைக் கமிஷனால் விசாரணை செய்யப்படவிருக்கிறாரென்றும் அவர்மீது சில குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

'பைல்கள்' காணாமல்போனது சம்பந்தமாகவும் திரு ஜயவீரா வீட்டிலிருந்து 75 பைல்கள் கண்டெடுக்கப்பட்டது சம்பந்தமாகவும் இரகசிய பொலிசார் சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையை பிரதமர் திரு டட்லி சேனநாயகாவும் ராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனாவும் பரிசீலனை செய்துவருவதாகவும் அடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுபற்றி அவர்கள் ஆலோசனை செய்வார்களென்றும் தெரிகிறது. பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சில் முக்கிய பதவிவகித்து சமீபத்தில் ஓய்வுபெற்ற ஒருவர் விரைவில் விசாரிக்கப்படக்கூடுமென்றும் தெரிகிறது.

---

## இன்று

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க யாழ்ப்பாணக் கிளையின் 28-வது வருடாந்த கூட்டம் திரு. இ. பொ. குமாரசாமி தலைமையில் யாழ்ப்பாணம் காவலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற விருக்கிறது. யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் உட்பட வேறுபலரும் உரை நிகழ்த்துவர்.

---

## புதிய பதவி

மீசாலை, வெள்ளி

திருக்கோணமலையில் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிபராக கடமையாற்றிய திரு. கா. சதாசிவம்பிள்ளை கல்லோயா கங்கை திட்டத்தில் விவசாய பொருளாதார நிபுணராக கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்.

---

## தேவை

பெண் விற்பனையாளர்கள் தேவை. நாள் சம்பளம் ரூபா 10-00, விநாயகம் இன்டஸ்ரீஸ், 89, மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் சந்திக்கு அருகாமை) யாழ்ப்பாணம். 681

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.